

தமிழ்நாடு அரசின் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி அவர்களை, தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறையால் நிறுவப்பட்ட, ரூ.2 லட்சம் ரொக்கப் பரிசைக் கொண்ட சி.பா.ஆதித்தனார் விருதைப் பெற்றதற்காக, ‘சட்டக்கதிர்’ இதழின் ஆசிரியர் டாக்டர் வி.ஆர்.எஸ். சம்பத் மற்றும் ஆசிரியர் குழு உறுப்பினர்கள் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். இவ்விருதை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வழங்கியிருந்தார்.

### மாநில அரசின் உறுதிக்கு

# ஒன்றிய அரசு பணிந்துள்ளது!

## டங்ஸ்டன் சுரங்க ஏல ரத்து குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் கருத்து!

சென்னை,ஜன.24-

“மாநில மக்களின் உணர்வுக்கும், மாநில அரசின் உறுதிக்கும் ஒன்றிய அரசு பணிந்துள்ளது” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் டங்ஸ்டன் சுரங்க ஏல ரத்து குறித்து தமது சமூக வலைதளப் பதிவில் கருத்துத் தெரிவித்துள்ளார்.

டங்ஸ்டன் சுரங்க ஏலத்தை ஒன்றிய அரசு ரத்து செய்து அறிவிப்பு வெளியிட்டது குறித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:

**நான் முதலமைச்சராக இருக்கும்வரை, என்னை மீறி டங்ஸ்டன்சுரங்கம்அமையாது என்று உறுதிபடத் தெரிவித்தேன்!**

**சட்டப்பேரவையில் ஒருமனதாகத்தீர்மானம்நிறைவேற்றினோம்! மக்களின் உணர்வுக்கும், மாநில அரசின் உறுதிக்கும் ஒன்றிய அரசு பணிந்துள்ளது!**

**இனி, மாநிலஅரசின்இசைவு பெறாமல் இத்தகைய சுரங்க ஏலஅறிவிக்கைகளைஒன்றிய அரசு வெளியிடக் கூடாது; மாநில உரிமைகளுக்கு எதிரான சட்டங்களுக்கு அ.தி.மு.க.,வும் துணைபோகக் கூடாது!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

### ‘திராவிட மாடல்’ நல்லாட்சி மீது

# அ.தி.மு.க. பரப்பும் அவதூறுகளுக்கு மக்கள் தக்க பாடம் புகட்டுவர்!

## எடப்பாடி பழனிசாமிக்கு - அமைச்சர் கே.என்.நேரு எச்சரிக்கை!

சென்னை,ஜன.24-

**“ ‘திராவிட மாடல்’ நல்லாட்சி மீது அ.தி.மு.க. பரப்பும் அவதூறுகளுக்கு தமிழ்நாட்டு மக்கள் தக்க பாடம் புகட்டுவர்” என்று நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சரும் கழக முதன்மைச் செயலாளருமான கே.என்.நேரு அவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

**இதுகுறித்து நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கே.என்.நேரு அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:**

முதலமைச்சர் அவர்கள், எதிர்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி கூறிய ‘20 சதவிகித தேர்தல் வாக்குறுதிகளைக் கூட இந்த அரசு நிறைவேற்றவில்லை’ என்ற பொய்க் குற்றச்சாட்டை ஆதாரத்தோடு மறுத்து, 505 தேர்தல் வாக்குறுதிகளில் 389 வாக்குறுதிகளை நிறைவேற்றி உள்ளோம் எனச் சிவகங்கை விழாவில் புள்ளிவிவரத்தோடு பதில் அளித்து பழனிசாமியின் பொய் முகத்தை கிழித்தெறிந்தார்.

தமிழ்நாட்டு மக்கள் முன் பழனிசாமியின் பொய் அம்பலப்பட்டு விட்டதால் ”ஆட்சிக்கு வரும் முன் புகார் பெட்டி வைத்து தி.மு.க பெற்ற மனுக்கள் நிலை என்னவென்று தெரியவில்லை” என



புதிய பொய்யை இன்று சொல்லியிருக்கிறார் பழனிசாமி. முதலமைச்சர் அவர்கள், ஆட்சிப் பொறுப்பேற்ற நூறு நாட்களில் தேர்தல் பரப்புரையின் போது பெறப்பட்ட புகார் மனுக்கள் மீது உரிய தீர்வு காணப்படும் என்ற வாக்குறுதியை அளித்தார். அதேபோன்று 07.05.2021இல் தாம் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் பொதுமக்களின் குறைகள் மீது விரைந்து தீர்வு காண “உங்கள் தொகுதியில் முதலமைச்சர்” என்ற தனித்துறையையே உருவாக்கி உத்தரவிட்டார்கள். கொரோனா போன்ற பெருந்தொற்றுக் காலத்திலும், அனைத்து மனுக்களும் உரிய முறையில் பரிசீலிக்கப்பட்டு 100 நாட்கள் முடிவில் 2.29 இலட்சம் மனுக்கள் ஏற்பளிக்கப்பட்டு உரிய பயன்கள் பயனாளிகளுக்கு சென்று சேர்ந்தன. பல்லாண்டுகளாக தீர்த்து வைக்கப்படாமல் இருந்த பல குறைகள் குறுகிய காலத்தில் தீர்த்து வைக்கப்பட்டன. இவை எல்லாம் தெரியாதது போல நடிக்கும் பழனிசாமி இன்று புகார் பெட்டியில் பெறப்பட்ட மனுக்கள் என்னானது என பொய் பேச கிளம்பிவிட்டார்.

**ஊர்ந்து பழக்கப்பட்டவரின் பொய்!**

ஊர்ந்து ஊர்ந்தே பழக்கப்பட்ட பழனிசாமி சமீபகாலமாக ஒரு பொய்யிலிருந்து மற்றொரு பொய்க்குத் தாவித் தாவி செல்லப் பழகிக்கொண்டிருக்கிறார்.

'பொய்யிலே பிறந்து பொய்யிலே வளர்ந்த புலவர் பெருமானே' என்பது பழனிசாமிக்குத் தான் கட்சிதமாக பொருந்தும். ‘முதல்வரின் முகவரி’ துறையின் கீழ் பொதுமக்களிடம் பெறப்படும் மனுக்கள் மீது உரிய நடவடிக்கைகள் தொடர்ந்து எடுக்கப்பட்டு வருகின்றன. 'முதல்வரின் முகவரி' துறை தொடர்பாக அதிகாரிகளுடன் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அவ்வப்போது ஆய்வுகள் நடத்துவதோடு மட்டுமல்லாமல் தமிழ்நாடு முழுக்க கள ஆய்வினை நடத்தி மக்களை சந்தித்தும் வருகிறார். இதெல்லாம் தெரியாமல் பழனிசாமி வாய் புளித்ததோ மாங்காய் புளித்ததோ எனப் பேசியிருக்கிறார். தூத்துக்குடி மக்களின் குறைகளை காதுகொடுத்து கேட்க கூட மனமின்றி கருணையில்லாமல் 13 அப்பாவி பொதுமக்களை சுட்டுக்கொன்ற அலங்கோல ஆட்சிநடத்திய பழனிசாமிக்கு திராவிட மாடல் ஆட்சி மீது குறை சொல்ல எந்த அருகதையும் இல்லை.

**வயிற்றெரிச்சல் பழனிசாமி!**

'சொன்னதை செய்வோம், செய்வதை சொல்வோம்' என்ற வழியில் மகளிர் உரிமை தொகை, மகளிர் விடியல் பேருந்து பயணம் போன்ற முக்கியமான தேர்தல் அறிவிப்புகளில் பெரும்பான்மையானவற்றை நிறைவேற்றியதோடு மட்டுமல்லாமல் தேர்தல் அறிக்கையில் சொல்லாத புதுமை பெண் திட்டம், காலை உணவு திட்டம், நான் முதல்வன் திட்டம், தமிழ் புதல்வன் திட்டம் போன்ற மக்களுக்கு பயனளிக்கும் பல்வேறு திட்டங்களையும் முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசு நிறைவேற்றி உள்ளது.

தேர்தல் வாக்குறுதிகளை எல்லாம் ஆட்சிக்கு வந்தபின் காற்றில் பறக்கவிடுவதையே வாடிக்கையாக கொண்ட அதிமுக விற்கும் பழனிசாமிக்கும், சொன்னதை செய்வதோடு சொல்லாததையும் செய்து முடிக்கும் முதலமைச்சர் அவர்களைக் கண்டு வயிற்றெரிச்சல் வரத்தான் செய்யும். அந்த வயிற்றெரிச்சல் பொறுக்காமல் தான் இப்படி அதிமுகவினர் வெட்டி ஒட்டி திரித்து பரப்பும் வீடியோக்களை பார்த்து அற்ப சந்தோஷம் அடைந்து அதை அப்படியே உளறி தனது வயிற்றெரிச்சலை தணிக்க நினைக்கிறார்.

பழனிசாமியின் இந்த பச்சை பொய்களை எல்லாம் தமிழ்நாட்டு மக்கள் நன்கு அறிவர். மக்கள் நலனுக்காக பார்த்து பார்த்து திட்டங்களை நிறைவேற்றி தமிழ்நாட்டை வளர்ச்சிப்பாதையில் வழிநடத்தி வரும் முதலமைச்சர் மீதும் திராவிட மாடல் நல்லாட்சி மீதும் அவதூறு பரப்ப அதிமுக போடும் கணக்குகளை எல்லாம் தமிழ்நாட்டு மக்கள் தவிடுபொடியாக்குவார்கள்.

இவ்வாறு அமைச்சர் கே.என்.நேரு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# அரிட்டாபட்டி டங்ஸ்டன் சுரங்கத்துக்கான ஏலம் ரத்து!

## தமிழ்நாடு அரசின் எதிர்ப்புக்குப் பணிந்த ஒன்றிய அரசு!

மதுரை,ஜன.24-

மதுரை மாவட்டம் அரிட்டாபட்டி டங்ஸ்டன் சுரங்கத்துக்கான ஏலத்தை ஒன்றிய அரசு ரத்து செய்தது. மதுரை மாவட்டம் மேலூர் பகுதியில் அரிட்டாபட்டி, வள்ளாலபட்டி, மீனாட்சிபுரம் ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய சுமார் 5 ஆயிரம் ஏக்கர் பகுதியில் ஸ்டெர்லைட் வேதாந்தா நிறுவனத்திற்கு சொந்தமான ஹிந்துஸ்தான் ஜிங்க் லிமிடெட் நிறுவனம் டங்ஸ்டன் கனிமம் எடுக்க ஒன்றிய அரசு அனுமதித்துள்ளது. இதை ரத்து செய்து, டங்ஸ்டன் திட்டத்தை முழுமையாக கைவிடக் கோரி மேலூர் சுற்றுவட்டார பகுதியினர் கடந்த 2 மாதங்களுக்கும் மேலாக பல்வேறு போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

தமிழ்நாடு அரசும் சட்டசபையில் கடந்த 9ம் தேதி டங்ஸ்டன் திட்டத்தை ரத்து செய்யக் கோரி தீர்மானம் நிறைவேற்றி ஒன்றிய அரசுக்கு அனுப்பியது.

இந்நிலையில், மதுரை மாவட்டம் அரிட்டாபட்டி டங்ஸ்டன் சுரங்கத்துக்கான ஏலத்தை ஒன்றிய அரசு ரத்து செய்தது.

எக்காரணம் கொண்டும் தமிழ்நாட்டுக்கு டங்ஸ்டன் சுரங்கத் திட்டம் வராது என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறியிருந்த நிலையில், தமிழ்நாடு அரசின் எதிர்ப்புக்கு ஒன்றிய அரசு பணிந்தது. மேலும், வேதாந்தா நிறுவனத்துக்கு வழங்கப்பட்ட ஏல உரிமை ரத்து செய்யப்படுவதாக ஒன்றிய அரசு அறிவித்துள்ளது.

### ப.தாயகம் கவி எம்.எல்.ஏ. - ஆர்.விநோத்காந்தி - ஜெ.எல்.ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ. - ஈரோடு சத்தியவதி சிறப்புரை!

# இராணிப்பேட்டை மாவட்ட மாணவரணி சார்பில் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் ஆர்.காந்தி வேண்டுகோள்!

இராணிப்பேட்டை, ஜன.24 -

இராணிப்பேட்டை மாவட்டச் செயலாளர் - அமைச்சர் ஆர்.காந்தி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

இராணிப்பேட்டை மாவட்ட மாணவரணி சார் பில் வாலாஜாபேட்டை நகர தி.மு.க. மொழிப்போர் தியாகிகளுக்கு வீர வணக்க நாள் பொதுக்கூட்டம் நாளை (25.01.2025 - சனிக்கிழமை) மாலை 6 மணிக்கு வாலாஜாபேட்டை பேருந்து நிலையத்தில் நடைபெறுகிறது.

நிகழ்ச்சிக்கு மாவட்ட மாணவரணி அமைப்பாள



ரும் இராணிப்பேட்டை நகராட்சி உறுப்பினருமான எஸ் விநோத் தலைமை தாங்குகிறார். வாலாஜாபேட்டை நகர கழக செயலாளர் டி. தில்லை , முன்னாள் நகர கழக செயலாளர் என்.டி. ரவிச்சந்திரன் ஆகியோர் அனைவரையும் வரவேற்று பேசுகிறார்கள்.

கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளரும் கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சருமான இராணிப்பேட்டை ஆர். காந்தி, கழக கொள்கை பரப்பு செயலாளர் அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெகத்ரட்சகன், கழக துணை அமைப்புச் செய லாளர் ப. தாயகம் கவி எம்.எல்.ஏ., கழக சுற்றுச்சூழல் அணி துணை செயலாளர் ஆர். விநோத்காந்தி மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜெ.எல் ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ , கழக பேச்சாளர் ஈரோடு சத்தியவதி வாலாஜாபேட்டை நகர மன்ற தலைவர் ஹரிணி தில்லை ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்று கிறார்கள். கூட்டத்தில் மாவட்ட அவைத் தலைவர் ஏ.கே.சுந்தர மூர்த்தி, மாவட்ட துணைச் செயலாளர்கள் சிவானந்தம் கே.துரை மஸ்தான் மாவட்ட பொருளாளர் ஏ.வி.சாரதி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் சுந்தரம், கண்ணையன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ஜெயந்தி திருமூர்த்தி, எம்.எஸ் மணி, அசோகன் ஒன்றிய குழு தலைவர்கள் சேஷா வெங்கட் , டி.பூங்காவனம் , சண்முகம், ஏ.வி.நந்தகுமார், கே.எம்.ஹுமாயூன், ஏ.கே.முருகன் ஆர். தமிழ்ச்செல்வன் ஆர். சௌந்தர், கிருஷ்ணமூர்த்தி, எம்.பி. பாண்டுரங்கன் ஏ.வி.சரவணன் ஆர்.பி. ரவீந்திரன், ஒன்றிய குழு தலைவர் எஸ்.அசோக், துணை தலைவர் கே. ரமேஷ் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொள்கிறார்கள்.

முடிவில் நகர மாணவர் அணி அமைப்பாளர் கே.சக்திவேல் நன்றி கூறுகிறார்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.


### பெருநகர சென்னை மாநகராட்சி
### மண்டலம்-5

ம.அ.5.ந.க.எண்.இ1 / RPM / 158 / 2024

**மின்னணு ஒப்பந்தம் அறிவிப்பு (Two Cover)**

மண்டலம் - 5, பகுதி - 13 கோட்டம் - 57ல் ஜட்காபுரத்தில் உள்ள பல்நோக்கு கட்டிடத்தில் இரண்டாம் தளம், (Portica) முதல் தளத்தில் மேற்கூரை அமைக்கும் பணிக்கு மேற்பார்வை பொறியாளர் (வடக்கு) அவர்களால் ஒப்பந்தம் வரவேற்கப்படுகின்றன.

பணிக்கான மதிப்பு **ரூ. 61,37,000/-** ஆகும்.

ஒப்பந்ததாரர்கள் **https://tntenders.gov.in** இணைய தளத்தின் மூலம் விவரங்கள் தெரிந்து கொண்டு மின்னணு ஒப்பந்தத்தில் நாள் **05.02.2025 பிற்பகல் 3.00** மணிக்குள் பங்கேற்கலாம். **06.02.2025 அன்று பிற்பகல் 3.30** மணிக்குள் ஒப்பந்தங்கள் திறக்கப்படும்.

செ.ம.தொ.இ / 279 / ஒப்பந்தப்புள்ளி / 2025

**மேற்பார்வை பொறியாளர் (வடக்கு)**


### திருவள்ளூர் கிழக்கு மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர்

# இளைஞர் அணி அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்கள் - அறிமுக ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. அறிக்கை!

திருவள்ளூர், ஜன. 24-

திருவள்ளூர் கிழக்கு மாவட்ட செயலாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் அறிக்கை வருமாறு

கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க திருவள்ளூர் கிழக்கு மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் அறிமுக ஆலோசனைக் கூட்டம் எனது (மாவட்ட செயலாளர் டி.ஜே.கோவிந்தராஜன்) தலைமையில் 26-01-2025 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 10.00 மணியளவில் கிரேஷீட் ஹோட்டல், காக்கவாக்கம், எல்லாபுரம் ஒன்றியத்தில் நடைபெறுகிறது.

மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கே.வி.லோகேஷ் மற்றும்



மாவட்ட துணை அமைப்பாளர்கள் ஜே. மோகன் பாபு, எம்.முரளிதரன், செ.யுவராஜ், இரா.கதிரவன் வரவேற்புரையாற்றுகிறார்கள். தலைமை செயற்குழு உறுப்பினர் ஜெ.மூர்த்தி, மாவட்ட நிர்வாகிகள் மு.பகலவன், மு.கதிரவன், கே.வி.ஜி. உமாமகேஸ்வரி, எம்.எல். ரவி, எஸ்.ரமேஷ், பொதுக்குழு உறுப்பினர்கள் ஏ. வி.ராமமூர்த்தி, பி.வெங்கடாசலபதி, பா.செ.குணசேகர், கே.சுப்பிரமணி, டாக்டர்.பரிமளம் விஸ்வநாதன் முன்னிலை வகிக்கின்றனர். சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி.சா.மு.நாசர், இஏபி.சிவாஜி, மாநில இளைஞர் துணைச் செயலாளர்கள் ப.அப்துல் மாலிக் மற்றும் பிரபுகஜேந்திரன், மாநில நிர்வாகிகள் சி.எச்.சேகர், கே.ஜி.பாஸ்கர்சுந்தரம், வெ.அன்புவாணன், ஜி.ஸ்டாலின், ஏஆர்டி.உதயசூரியன், ஏ.கே.சுரேஷ், செந்தமிழ்சசி சிறப்புரையாற்றுகின்றனர்.

ஒன்றிய செயலாளர்கள் ஆ.சத்தியவேல், மு. மணிபாலன். டி.கே.சந்திரசேகர், கி.வே.ஆனந்தகுமார், ஜான்(எ)பொன்னுசாமி, ந.பரிமளம், எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ், நா.செல்வசேகரன். கா.சு. ஜெகதீசன், ஜி.ரவிக்குமார், அபிராமிகுமரவேல், இரா. அறிவழகன், பி.முத்து, க.சு.தமிழ்உதயன் பங்கேற்கின்றனர். முடிவில் துணை அமைப்பாளர் டி.சங்கர் நன்றி கூறுகிறார்.

ஒன்றிய, நகர, பேரூர் இளைஞர் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு திருவள்ளூர் கிழக்கு மாவட்ட செயலாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் வாலாஜாபாத் தெற்கு ஒன்றியம் வாரணவாசி ஊராட்சியில் முத்தமிழ் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழாவும் மற்றும் கழகஇளைஞர் அணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம். எல்.ஏ. தலைமையில் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் சஞ்சய்காந்தி ஏற்பாட்டில் புதிய கொடி கம்பம் அமைத்து கழக கொடியை அமைச்சர்கள் ஆர்.காந்தி, சி.வி.கணேசன் ஆகியோர் இணைந்து கொடியேற்றினர். உடன் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், ஒன்றிய செயலாளர் பி.சேகர், பேரூர் செயலாளர் என்.பாண்டியன், ஒன்றிய குழு தலைவர் ஆர்.கே. தேவேந்திரன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் வி.குமரன், துணை அமைப்பாளர்கள் தியாகராஜன் எல்.ரமேஷ், எஸ்.எஸ்.ஆர். சத்யா, கார்த்திக்குமார், உள்ளிட்ட ஒன்றிய கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.